# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.75/2020.

Prosecution witness for P.W.1.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திருமதி. வெள்ளைத்தாய். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.08.2025.

Accused absent. 317 Crpc petition filed.

முதல் விசாரணை

நான் தற்போது எட்டயபுரத்தில் குடியிருந்து வீட்டோடு இருந்து வருகிறேன். இறந்துபோன செல்லத்தாய் என் தாயார். எதிரியை தெரியும். 18.04.2016 அன்று இரவு சுமார் 10.45 மணியளவில் நான் என் தாயார் வீட்டில் தூங்கி கொண்டிருந்தேன். அப்போது தாயாரை எதிரி வெட்டி விட்டதாக சொன்னார்கள். எதிரி என் சித்தப்பா முறை. எதற்காக எதிரி என் தாயாரை வெட்டினார் என்று எனக்கு தெரியாது. என் தாய்மாமா மந்திர சூடாமணிக்கும் எதிரிக்கும் ஏதோ பிரச்சனை இருந்தது. எதிரியின் தாயாரை என் தாய்மாமா கொலை செய்ததாக சொன்னார்கள். எதிரியின் தாயாரை கொலை செய்ததாக சொல்லப்படும் சுமார் 30 நிமிடத்தில் என் தாயாரை வெட்டிவிட்டதாக சொன்னார்கள். நான் காவல்நிலையம் சென்று என் தாயாரை வெட்டிவிட்டதாக சொன்னதை போலீசார் புகார் மனுவாக எழுதி என்னிடம் கையொப்பம் பெற்றுக் கொண்டார்கள். அந்த புகார் மனு **அ.சா.ஆ 1**. என் தாயார் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். என் தாயார் வீடு இருந்த தெருவில்தான் சம்பவ இடம் உள்ளது. போலீசார் மறுநாள் காலையில் மருத்துவமனையில் இருந்தபோது நானும், மருத்துவமனையில் இருந்தேன். பிரேத விசாரணையின்போது நான் அங்கு இருந்தேனா என்றால் போலீசார் என்னிடம் கையொப்பம் மட்டும் பெற்றுக் கொண்டார்கள். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது. சாட்சி மேற்கொண்டு விசாரணை செய்யப்படுகிறார்.

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலீஸ் விசாரணையில் 18.04.2016 அன்று இரவு சுமார் 10.45 மணியளவில் ஆஜர் எதிரியின் தாயாரை என் மாமாவும், அவரது மகன்களும் சேர்ந்து வெட்டி கொலை செய்துவிட்டதால் அன்று இரவே சுமார் 11.15 மணியளவில் ஆஜர் எதிரி முன்விரோதம் காரணமாக என் தாயாரை வீட்டின் கதவை உடைத்து உள்ளே வந்து என் தாயாரை அரிவாள் கொண்டு விரட்டி சென்று கருப்பசாமி என்பவர் வீட்டின் முன்பாக அரிவாளால் தலை மற்றும் முதுகு, கை தாக்கி இடது கை பெருவிரல் துண்டிக்கப்பட்டு சம்பவ இடத்திலேயே என் தாயார் இறந்துவிட்டதாக சொல்லியுள்ளேன் என்றும், அதுகுறித்து காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன் என்றும், போலீசார் மருத்துவமனையில் பிரேத விசாரணை செய்யும்போது நானும் உடனிருந்ததாக சொல்லியுள்ளேன் என்றும், தற்போது எதிரி என் உறவினர் என்பதால் அவரை இந்த வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக பொய்சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை

இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN Digitally signed by M THANDAVAN Date: 2025.08.29 16:19:18 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.

## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.75/2020.
Prosecution witness for P.W.2.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திருமதி. அங்காள ஈஸ்வரி. | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.08.2025.

Accused absent. 317 Crpc petition filed.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது இராமநாதபுரம் கொக்காடியில் குடியிருந்து வீட்டோடு இருந்து வருகிறேன். இறந்துபோன செல்லத்தாய் என் தாயார். அ.சா.1 என் தங்கை. எதிரி என் சித்தப்பா. இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது. சாட்சி மேற்கொண்டு விசாரணை செய்யப்படுகிறார்.

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலீஸ் விசாரணையில் 18.04.2016 அன்று நான் இரவு எங்கள் வீட்டில் இருந்தபோது எதிரியின் தாயாரை என் தாய்மாமா குடும்பத்தினர் கொலை செய்த முன்விரோதத்தால் அன்றே இரவு சுமார் 11.15 மணியளவில் எதிரி என் தாயாரை கொலை செய்துவிட்டதாக நான் கேள்விப்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றும், பின்னிட்டு மறுநாள் காலை அரசு மருத்துவமனையில் போலீசார் பிரேத விசாரணை செய்யும்போது நான் உடனிருந்ததாக சொல்லியுள்ளேன் என்றும், தற்போது எதிரி என் சித்தப்பா

என்பதால் அவரை இந்த வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக பொய்சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை

இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN
Digitally signed by M THANDAVAN
Date: 2025.08.29 16:19:26 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.